ஸ்ரீ திரிபுரிசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

தன்னுடைய வாசஸ்தானத்தை ஒழுங்காக வைத்துக்கொள்ள விரும்பியவன் பக்கத்துவீட்டுக்காரனுடைய நிலைமையையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். அப்படிக்கில்லாமல் கண்டபடி ஆண்டி பரதேசிகள் தங்குமிடமாக ஆய்விடும்படி உபேக்ஷயாயிருந்துவிட்டால் தற்காலம் வசிக்கவென்று அவ்விடம்வந்தபரதேசிகள் அந்தக் கட்டடத்தின் அருமையையறியாமல் அழிந்துபோனாலும் கெவனிக்கமாட்டார்கள். அந்தவிடம் பாழாகவே அடுத்த வீட்டுச் சொந்தக்காரன் தன் வீட்டை எவ்வளவு கவனித்தாலும் இதுவும் காலக்ரமத்தில் பாழாகிவிடும். ஆகையால் அக்கம் பக்கத்து வீடும் ஒழுங்காயிருக்கும்படியும் நல்ல மனிதர்கள் அங்குவந்து தங்கும்படியும் செய்யவேண்டியது வீட்டுக்காரனின் கடமையாகும். இது போலவே கிராமவாசிகளுக்கு அக்கம்பக்கத்துக் கிராமம் ஒழுங்காயிருக்க வேண்டும். இந்த உதாஹரணம்போல் ஒரு லோகத்தில் வசிக்கும் நல்ல செயலுள்ளவர்கள் லோகாந்தரமும் ஸாது ஜனங்களிருப்பிடமாகி ஒழுங்காயிருக்க வேண்டுமென கெவனிக்கவேண்டிய பொருப்புடையவராவார்கள். ஆகவே ஸ்வர்க்கம் முதலிய மேலுலகங்களில் வசிக்கின்றவர்களும் ஞானைச்வர்ய சக்திமிகுந்தவர்களுமான தேவர்கள் தங்கள் உலகத்திற்கு அடுத்த உலகமான மனுஷ்யலோகத்தை எவ்வித வியவஸ்தையுமின்றி பாழாகப்போகும்படி செய்துவிடமாட்டார்கள். அப்படி கெவனிக்காமல் உபேக்ஷ செய்வார்களானால் அவர்களுக்கு ஹவிர்பாகம் கிடைப்பதே அரிதாய்விடும். அதனால் கர்மபூமியாகிய பரதபூமியில் வசிக்கும் கர்மாதிகாரிகள் கட்டுக்கு மீறி கண்டபடி நடக்க தேவர்கள் பார்த்திருக்கமாட்டார்கள், எவரேனும் ஒருவரிருவர் இருப்பரேயானால் அவருக்கும் நல்ல புத்தியைப் புகட்டி நல்ல வழியையே போதிப்பார்கள். அதனால் தற்காலத்தில் வர்ணாச்ரமதர்ம விரோதிகள் கிளம்புகிறார்களேயெனக் கலைக்காமல் வர்ணாச்ரமிகள் மேலான தேவர்களது நோக்கம் போல் நடந்து சிரேயஸ்ஸை அடைவார்களாக.

சுபம்!

பத்திராதிபர்

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-௵ வைகாசி-௴ ௭௨

புவனஞானம்.

புவனமெனப்படும் பிரமாண்டமானது கீழேழு உலகங்களு டனும், மேலேழு உலகங்களுடனும்கூடியதாம். கீழேழு உலகங்க ளெனப்படுவது ஏழு பாதாளங்களாம். மேலேழென்பது பூமி முதல் ஸத்தியலோகம்வரையுள்ள ஏழுலோகங்களாம். அதலம், விதலம், ஸுதலம், ரஸாதலம், தலாதலம், மஹாதலம் பாதாலம், என பாதாளலோகம் ஏழு பிரிவுடையது. அதற்குமேல் பூலோ கம். இது தட்டைவடிவமாகத்தோன்றினும் கோளவடிவமா கவே சாஸ்திரங்களில் கூறப்படுகின்றது. அங்ஙனமே ஆரியபடீ யம் கோளபாதத்தில்—

वृत्तभपं जरमध्ये कक्ष्यापरिवेष्टितः खमध्यगतः ।
मृज्जलशिखिवायुमयोभूगोलस्सर्वतो वृत्तः ॥

"உருண்டை வடிவமான நக்ஷத்திரகோளத்தின் நடுவில் சந்திரன், புதன் சுக்கிரன், ஸூரியன், குஜன், குரு, சனி இவர்கள்சஞ்சரிக் கும் கக்ஷ்யாமார்க்கத்தின்நடுவில்மண்-ஜலம்நெருப்பு காற்று இவை களின்சேர்க்கைவடிவமானதும்,உருண்டவடிவமானகோளமாயுள் ளதுமான பூமி பிருமாண்ட ஆகாயமத்தியில் இருக்கின்றது" என்று கூறப்பட்டது. அதன் மேற்புறத்தில் பிராணிகள் வஸிக் கின்றன. அங்ஙனமே ஆரியபடீயத்தில்—

यद्वत्कदंबपुष्पग्रंथिः प्रचितस्समंततः कुसुमैः ।
तद्वद्धि सर्वसत्वै र्जलजैःस्स्थलजैश्च भूगोलः ॥

"கீழும் மேலும் நாலாபக்கங்களிலும் அடம்பமரம் பூங்கொத்துக் களால் சூழப்பட்டிருப்பதுபோல் பூகோளமும் நீரில்வாழும் பிராணிகளாலும் நிலத்தில்வஸிக்கும் பிராணிகளாலும் சூழப்பட்

டிருக்கின்றது" என்று கூறப்பட்டிருக்கின்றது. அதில் அவீசி என்ற நரகம்முதல் மேருபருவதம்வரை ஸ்வர்க்க நரகங்களோடு கூடியதாம்.

स्वर्मेरुः स्थलमध्ये नरको बडबामुखश्च जलमध्ये ।
अमरमरा मन्यंते परस्परमधस्स्थितान्नियतम् ॥

"வடக்குக்கோடியில் ஸ்தலமத்தியில் மேருபர்வதமும்தென்கோடியில் ஸமுத்திரஜலமத்தியில் படபாமுகமும் நரகமுமிருக்கின்றது மேருபருவதத்திலுள்ளவர்களும்நாஸ்திகலுள்ளவர்களும்ஒருவருக்கொருவர் தலைகீழாயிருப்பதாய் நினைக்கிறார்கள்" என்று ஆரியபடீயத்தில் உள்ளது. அதில் அவீசி என்ற நரகம்முதல் மேலுக்குமேல் மண்-ஜலம்-நெருப்பு-காற்று இருள் இவைகள் சூழ்ந்தமகாகாலம் அம்பரீஷம், ரௌரவம், மஹாரௌரவம், காலஸூத்திரம், அந்ததாமிஸ்ரம், என்ற ஆறு நாகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். அந்த நரகங்களில் பாபிகள் தங்களது பாபகர்மத்தால் ஏற்பட்ட துக்கவேதனைகளை அனுபவித்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்களாம். மேருபருவதத்தில் தேவர்கள் வஸிக்கிறார்களாம். இந்த பூமி ஏழுத்வீபங்களோடு கூடினதாம். இதற்குமேல் துருவமண்டலம், ஸூரியாதி கிரஹங்கள். பெரியநக்ஷத்திரங்கள் சின்ன நக்ஷத்திரங்கள் முதலிய நக்ஷத்திர மண்டலங்களால் விசித்திரமாயமைக்கப்பட்டுள்ளது அந்தரிக்ஷலோகமாம். அதற்குமேல் மூன்றுவது இந்திரனுலாளப்பட்ட சுவர்க்கலோகமாம். அதற்குமேல் விராட்புருஷனது ஆளுகையிலுள்ள 4வதுமஹர்லோகமாம். அதற்குமேல் ஜனலோகமென்னும் தபோலோகமென்னும் ஸத்யலோகமென்றும் மூன்றுவிதமாயுள்ள பிரும்மலோகமாம். இத்தகைய பதினான்கு லோகமுள்ள பிரும்மாண்டத்தில் பிராணிகள் தங்கள் தங்களது கர்மாநுகுணமாக ஸுக துக்கங்களை அநுபவிக்கிறார்கள். அந்த ஸுக துக்கங்களுக்கு பாரதபூமியென்னும் கர்மபூமியில் செய்யப்படும் புண்ணியபாபகர்மங்களே காரணமாம். அதற்காகவேதான் பாரதபூமியில் அதிகாரிபேதமும் வர்ணாசிரம வியவஸ்தையும் சாஸ்திரங்களில் நிரூபிக்கப்படுகின்றது. அப்படியிருக்கையில் இந்த சாஸ்திரமெல்லாம் கட்டுக்கதைகளென்றும் வர்ணாசிரம வியவஸ்தை எவ்விதத்திலும் கூடாதென்றும் கண்டபடி வாதம்புரியும் தற்காலத்திய மேதாவிகள் பிராணிகளுக்கு

பரலோகத்திலுள்ள பாத்தியம் இழந்துபோகும்படிக்கும் ரௌரவாதி நரகங்கள் அனுபவத்திற்கு வரும்படிக்கும் உள்ள கெட்ட வழியைப்போதிக்கின்றவர்களாகையால் அவர்கள் வார்த்தையை விவேகிகள் காதிலே வாங்கக்கூடாது. சாஸ்திரங்களில் கூறப்படும் ஸ்வர்க்க நரகாதிகளும் கிடையாது. அவைகளின் ஸாதனங்களும் சரியானவைகளல்ல—எனக்கூறுகின்றவர்களின் பேச்சை எப்படி நம்பமுடியும். ஆரண்யகம் முதலிய சுருதிபாகங்களிலும் ஸ்மிருதிகளிலும், யோகஸூத்திரத்திலும், ஸ்ரீ பாகவதாதி புராணங்களிலும் இவ்வுண்மையை உரைக்கவே புவனகோசஞானம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. அதனைச்சரிவாகற்றுணர்ந்த விவேகிகள் நாஸ்திகர்களின் நாஸ்திகவாத வலையில் கட்டுண்டு கஷ்டப்படாமல் தமது சொந்த பகுத்தறிவால் நிச்சயிக்கப்பட்ட சாஸ்திரீயமான நல்லவழிநடந்து பேரின்பம் பெருவாராக.

சுபம், பத்திராதிபர்.

முகவுரை.

புண்யபூமியாகிய பாதநாட்டின் புதல்வர்களாகிய நம்முடைய ஆர்யமதத்தின் ஸ்வரூபத்தையும் நமது தற்கால நிலைமையையும் கடமைகளையும் முற்றிலும் சுருக்கமாகப்பல கட்டுரைகள் மூலம் வெளியிட முன்வந்துள்ள இக்கால் பிரதிபந்தங்களாகிய இடையூறுகளை ஒழித்து முற்றுப்பெருவதாகிய பரமநோக்கத்தை எல்லாம் வல்லவன் பூர்த்தி செய்விப்பானாக.

ஹிந்துமதம்.

ஆர்யர்களாகிய நம்முடையமதம் ஸனாதனமதம் அல்லது வர்ணாச்ரம மதம் என்று கூறப்படலாம். தற்காலம் பொதுவாக ஹிந்துமதம் என வழங்கப்படுகிறது, ச்ருதிகள், ஸ்மிருதிகள் புராணங்களும் ஜ்யோதிஷம் ஆயுர்வேதம் மந்திர சாஸ்திரம் முதலான கலாநூல்களும் தர்மசாஸ்திரங்களாகிய கடமை நூற்களும் இம்மதத்தில் அடங்கியதாம். மேலும் ராஜரீகமார்க்கமும், பிராமணர்முதலிய வர்ணப்பிரிவுகளும், பிரம்மசர்ய முதற்கொண்ட

ஆச்ரமபேதங்களும் பலவாறான நிலைமைகளுக்கேற்ற உலகசமூகங்களின் தர்மப் பிரிவினைகளும் அவைகளுக்குற்ற இடம் காலம் முதலியனவும் விளக்கப்பட்டுள்ளன.

இவ்வுலகின்கண் பிறப்பெய்திய மானிடர்களின் நிலைமைகளுக்கேற்ப, கூடியவரை பாமரர்கள் இகவாழ்விற்கு இடையூறில்லாமலும் யாவரும் அனுஷ்டிக்க சௌகர்யங்கள் அமைந்ததாயுள்ள தர்மங்களைப் புகட்டி, துக்கமயமாகிய இவ்வுலகத்தைக் கடந்து பேரானந்தமாகிய மோக்ஷத்தையளிக்கும் முறைகளை அனுபவத்தில் காட்டுவதே இவைகளின் பரமதாத்பர்யமாகும்.

அறிவில் முதிர்ந்தவர்கள் அழியும் உலகில் ஆசையை வேறுடன் களைந்து குறுகிய காலத்தில் பாரமார்த்திக ஆனந்தத்தன்மையை எளிதில் அடைய பல்வேறு மார்க்கங்களும் அமையப்பெற்றிருக்கின்றன.

உலகிலே சத்யம், அஹிம்ஸை, ஸமாதானம் இவைகள் நிறவி வகுப்புச்சண்டைகள் வேலையில்லாப்போராட்டம் இவைகள் தொலைந்து அவரவர்களது பரிபக்குவத்திற்குகந்த மார்க்கங்களைத் தழுவி வீட்டையடைவதற்கான வழிகள் இம்மதத்தில் தெளிவாக புகட்டப்பட்டிருக்கின்றன.

உலகின் மதங்களில் சிறந்ததாயும் பிறவி, முதல் ஏற்படக்கூடிய எல்லா சந்தர்ப்பங்களுக்கும் இடமளிப்பதாயும் அவைகளுக்கான பரிஹாரங்களைப் போதிப்பதும் மதமாற்றமாகிய சீர்கேடு ஒழியப்பெற்றதாகிய இம்மதத்தவர்கள் கூடுமானவரையில் தங்கள் வாழ்நாளை வீண்நாளாக்காது தர்மமார்க்கங்களை ஒழுக்கத்திற்சிறந்தவர்களிடம் கற்றுணர்ந்து அவைகளை அனுஷ்டானத்தில் புகுத்தி ஜன்மத்தை புனிதப்படுத்தி பாரமார்த்திக வாழ்விற்கு தகுதியுள்ளதாகச் செய்வதன்மூலம் பேரின்பத்தை அடைய முற்படுவதன்றி வருங்காலசந்ததியார்களுக்கும் நல்வழி காட்டியவர்களாய் இருப்பார்களாக.

R. நடராஜன்.

அத்வைத மதம் வைதிகம்.

(351-வது பக்கத்தொடர்ச்சி)

சுருதிஸ்மிருதி புராணம் முதலியதுகளில் பிரதிபாதிக்கப் பட்டுப் பிரசித்தராயுள்ள பரமேசுவரன் பலவித விசித்திர சக்திகள் வாய்ந்த மாயை என்னும் உபாதியுடன் கூடிய தன்னிடத்தில் தேன்மெழுக்கில் ஸ்வர்ணரேணுக்களைப்போல் பிரளய காலத்தில் ஒடுங்கியிருந்த ஸகல ஜீவராசிகளையும் ஸிருஷ்டி காலத்தில் அவரவர்களுடைய கர்மானுகுணமாகப் படைத்து அவர்களுக்குப் போக்யங்களாகிய விசித்திரப் பிரபஞ்சங்களை உண்டுபண்ணி அதில் தமது ஆஜ்ஞா ரூபமான சுருதிஸ்மிருதி முதலியதில் தம்மால் வர்ணாசிரமங்களுக்குத் தக்கவாறு செய்யும்படி விதிக்கப் பட்டதும் செய்யக்கூடாதென்று விலக்கப்பட்டதும், தமது சட்டங்களுமாயுள்ள தர்மாதர்மங்களுக்குத் தக்கவாறு தேசகால விசேஷங்களை அறிந்து ஸுகரூபமாய் இஷ்டமாகிய ஸ்வர்க்கம் முதலிய தேவ ஜன்மாக்களால் அநுபவிக்கப்படும் பலன்களையும், துக்கரூபமாய் அனிஷ்டமாகிய கஷ்டத்பீடை நரகம் முதலிய திர்யக் ஜந்துக்கள் நாரகிகள் முதலியவர்களால் அனுபவிக்கப் படும் பலன்களையும் ஸுகதுக்க ரூபமாய் மிச்ரமாகிய மனுஷ்யர்களால் அனுபவிக்கப்படும் பலன்களையும் ஸகலமான ஜீவராசிகளுக்குமளிக்கின்றார். அவரே ஸர்வாத்யக்ஷர். ஸர்வாந்தர்யாமி. வைஷம்யம் அதாவது ஒருவனிடம் பக்ஷபாதமும் மற்றொருவனிடம் துவேஷமுமுள்ளவராயிருத்தல், நைர்கிருண்யம். அதாவது தயவில்லாமை முதலிய தோஷங்களுக்கு இடமில்லாமல் பிராணிகளுக்கு அவரவர்கள்செய்யும் கர்மத்துத்துக்குத் தக்கபடி பலமளிப்பவர். ஸர்வகர்மாராத்யர். ஸிருஷ்டி (படைத்தல்) ஸ்திதி (காத்தல்) ஸம்ஹாரம் (அழித்தல்) திரோபாவம் (மறைத்தல்) அனுக்ரஹம் (அனுக்ரஹித்தல்) என்னும் ஐந்தொழில் புரிபவர். ஸச்சிதானந்த ஸ்வரூபர் என்பது வேதாந்தங்களின் முடிபு. இவ்வித மஹிமைவாய்ந்த பரமேசுவரன் தமது ஆஜ்ஞாரூபமான சுருதிஸ்மிருதிகளில் சொல்லிய தர்மங்களைச் செய்பவர்களிடத்திலும் தனது பரிசர்யை (பூஜை) பிரணமம் (நமஸ்காரம்) அஞ்சலி செய்தல் ஸ்துதி (ஸ்தோத்திரம் செய்தல்) முதலிய அதிசிரத்தை

யுடன் கூடிய பக்திகளால் தம்மை ஆராதிப்பவர்களிடத்திலும் பிரஸாதத்தை (ஸந்தோஷத்தை) அடைகின்றார். லௌகிக பிரபுக்களும் ராஜாக்களும் தம்மை ஆராதிப்பவர்களிடத்திலும் தான் செய்த சட்டத்தைப் பரிபாலிப்பவரிடத்திலும் ஸந்தோஷங் கொண்டு அவரவர்களுக்குத்தகுந்த தம்மால் கொடுக்கக்கூடிய பலன்களை வியவஸ்தையாய் அளிக்கின்றார்களென்பது அனுபவ ஸித்தம். அவ்விடத்தில் பிருத்யர்களோ பிரஜைகளோ செய்யும் வேலையே அவர்களுக்கு சேரிலோ அபூர்வத்தின் மூலமாகவோ பலத்தைக் கொடுக்கின்றது என்பது கிடையாது. பின்னையோ வெனில் அவர்கள் செய்த வேலையால் ஸந்தோஷப்பட்ட பிரபுக்களே அதே ஸமயத்திலோ அல்லது காலாந்தரத்திலோ அவர்களுக்குப் பலன்களைக் கொடுக்கின்றார்கள் என்றுதான் யாவரும் அறிந்த விஷயம். அதுபோல் ஈசுவரனும் ஜீவர்கள்செய்த தர்மம் உபாஸனம் முதலியதுகளால் ஸந்தோஷப்பட்டு தர்மோபாஸனங்களுக்குத் தக்கவாறு தேசகாலங்களுக்கு உசிதமாய் அதே காலத்திலோ காலாந்தரத்திலோ வியவஸ்தையாய்ப் பலன்களைக் கொடுக்கலாமானதால் அபூர்வம் என்பது வேண்டியதில்லை. அபூர்வத்தின் ஸ்தானத்தில் ஈசுவரப்ரசாதத்தையே ஒப்புக்கொண்டு ஸ்திரகாலமிருக்கக் கூடிய அதன் மூலமாய் கர்மபலம் ஏற்படுவது பொருந்தும். அபூர்வத்தை ஒப்புக்கொண்டாலும் ஜடமாகிய அவ்வபூர்வமோ கர்மமோ சேதனனாகிய புருஷனால் ஏவப்படாது ஸ்வதந்திரமாய் பலத்தைக் கொடுக்காது என்று ராஜஸேவை முதலிய திருஷ்டாந்தங்களினால் கீழ்காட்டப்பட்டபடியால் ராஜாமுதலியவர்களின் ஸந்தோஷத்தைப் போல் ஈசுவரனுடைய ஸந்தோஷத்தை ஒப்புக்கொள்ள வேண்டியிருப்பதால் அதை ஒப்புக்கொண்டபிறகு அதைக்கொண்டே கர்மபலம் ஸித்திக்கும்பொழுது அபூர்வமும் ஒப்புக்கொள்ள வேண்டியது அனாவசியமல்லவா. ஆகையால் தர்மங்களுக்கு பலம் கொடுப்பதில் ஈசுவரப்ரஸாதமே துவாரம். அதுபோல் அதர்மங்களுக்கு நரகம் முதலிய அனிஷ்ட பலன்களைக் கொடுப்பதற்கும் துரிதாபூர்வம் என்று ஓர் அபூர்வத்தை துவாரமாக ஒப்புக்கொள்ளாது ஈசுவரகோபமே துவாரம் என்று ஒப்புக்கொள்ளலாம். லோகத்திலும் ராஜாக்கள் தனது சட்டங்களை மீறுபவர்களிடத்தில் கோபங்கொண்டுதண்டனை முதலிய அனிஷ்டபலன்களை அவரவர்களுடைய குற்றத்

தக்கபடி கொடுப்பது அநுபவம். ராஜாக்கள் நல்ல காரியங்களை செய்பவர்களை அநுக்ரஹித்தாலும் கெட்டகாரியங்களைச் செய்கிறவர்களைச் சிக்ஷித்தாலும் பக்ஷபாதமுள்ளவர்களென்றும் தயவில்லாதவர்களென்றும் கருதப்படாமலிருப்பது போலவே ஈசுவரன் தார்மிகர்களிடத்தில் பிரஸாதத்தைச் செய்தாலும் பாபிஷ்டர்களிடத்தில் கோபங்கொண்டாலும் பக்ஷபாதம் தயவில்லாமை முதலிய தோஷங்களில்லாதவர் என்பது பொருத்தமே.

இந்த விஷயம் சாரீரக மீமாம்ஸையில் மூன்றுவது அத்யாயம் இரண்டாவதுபாதம் फलमतउपपत्तेः கர்மங்களின் பலம் ஈசுவரனுல் அளிக்கப்படுகின்றது. அவ்விதம் சொல்வதுதான் பொருத்தமாதலின் என்னும் முப்பத்தெட்டாம் சூத்திரத்தில் பகவான் வியாஸமுனிவரால் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஈசுவரன் தன்னை உபாசிப்பவர்களுக்கு அன்னத்தைக்கொடுக்கின்றுர். பணத்தைக்கொடுக்கின்றுர். என்று கருத்தை விளக்கும் பிருஹதாரண்யக சுருதியிலும்,

स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विंदति मानवः ।

மனுஷ்யன் தனது கர்மாவினுல் ஈசுவரனைப் பூஜித்து அவரது பிரஸாதத்தால் கர்மபலன்களை அடைகின்றுன் என்று பகவத்கிதையிலும் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் பரமேசுவரனே தனது பிரஸாதத்தின் துவாராவாக கர்மங்களுக்கு காலதேசானுஸாரமாக பலன் அளிப்பவர் என்று வேதாந்திகளின் முடிவானதால் அபூர்வத்தை ஒப்புக்கொள்ளாதபோனுலும் ஒருவித அநுபபத்தியும் வேதாந்திகளுக்குக் கிடையாதென்று முடிவாயிற்று...... மீமாம்ஸகர்கள் இவ்வித ஈசுவரனைப் பலம் கொடுப்பவராக ஒப்புக்கொள்ளாதபடியால் அபூர்வத்தை ஒப்புக்கொண்டு அதன் மூலமாகக் கர்மங்களே பலன் அளிக்கின்றது என்று ஒப்புக்கொள்ளுகிறுர்கள். இக்கருத்து धर्मं जैमिनिरत एव ஜைமினி மஹர்ஷியானவர் யாகத்தால் ஸ்வர்க்கத்தை அடையக்கடவன் என்று கூறுகிறபடியாலும் கர்மம் அபூர்வத்தின் துவாராவாகப் பலத்தைக்கொடுப்பது பொருந்துமாதலாலும் கிருஷி, மர்தனம் (வாயூபத்ரவம் நீங்குவதற்காகச் சரீரத்தைப் பிடித்துவிடல்) முதலிய கர்மங்கள்போல் யாகம் முதலிய தர்மமே ஈசுவரனை அபேக்ஷிக்காது பலத்தைக்

கொடுக்கின்றது என்று கூறுகின்றார் என்று சாரீரமீமாம்ஸையில் மூன்றாவது அத்தியாயம் இரண்டாவது பாதம் நாற்பதாவது சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. இந்த மீமாம்ஸகர்களின் ஸித்தாந்தம் கீழ்க்காட்டியகாரணங்களால்ஸரியன்று. வேதாந்திகளின் ஸித்தாந்தமே உபபத்தியுள்ளது. ஏனெனில் சுருதிகளில் ஈசுவரன் ஒருவர் இருக்கிறாரென்றும் அவரே கர்மபலப்ரதரென்றும் ஸகல கர்மங்களும் அவருடைய ஆராதனரூபங்களென்றும் தேவர்கள் யாகத்தால் யாகரூபியாயுள்ள ஈசுவரனை ஆராதித்தார்கள் என்றும் அனேகம் ஸ்தலங்களில் தாத்பர்யத்தால் பிரதிபாதிக்கின்றபடியால் ராஜஸேவையின் நியாயத்தை உபயோகப்படுத்தி ஈசுவரப்ரஸாதத்தால் பலம்ஏற்படுவதாய் ஒப்புக்கொள்ளவேண்டுமே தவிர கிருஷிமர்தனம் முதலிய கன்மங்களின் நியாயத்தை உபயோகப்படுத்திக் கர்மத்தாலேயே பலம் ஏற்படுவதாக ஒப்புக்கொள்வது உசிதமில்லை. அது சுருதியின் கருத்தாகமாட்டாது. இவ்விதம் சுருதிகள் தாத்பர்யத்தால்கூறும்பொழுதுமீமாம்ஸகர்கள்ஈசுவரன் கர்மபலப்ரதன் இந்திரன் முதலிய தேவர்கள் கர்மபலப்ரதர்கள் என்பது முதலிய சுருதிகளை அர்த்தவாதமென்றும் அதில்கருத்துள்ளதன்று என்றும் ஒப்புக்கொண்டு பூர்வமீமாம்ஸையின் ஒன்பதாவது அத்தியாயம் முதல் பாதம் நான்காவதுஅதிகரணமான தேவாதிகரணத்தில் அசேதனமாகிய சப்தத்தைத் தவிரவேறு சேதனமாகிய தேவதையும் அதற்கு விக்ரஹம் (சரீரம்) யாகத்தில் கொடுக்கப்படும் ஹவிஸ்ஸை ஸ்வீகரித்தல், அதைப் புஜித்தல், திருப்தி, ப்ரஸாதம் என்னும் விக்ரஹாதி பஞ்சகமும் கிடையாது. விக்ரஹாதிகளை ஒப்புக்கொண்டால் ஒரே ஸமயத்தில் நடக்கும் பல யாகங்களுக்கு ஹவிஸ்ஸை ஸ்வீகரிப்பதற்காக ஒரே தேவதை எப்படிப் போகமுடியும். அப்படி தேவதைகள் வருவது காணப்படவுமில்லை என்பது முதலிய யுக்திகளைக் கூறி ஸித்தாந்தம் செய்திருப்பது எப்படி பொருந்துமென்றால் கூறுவாம்.

(தொடரும்)

போலகம், சு, ராமாசாஸ்திரிகள்.

ஸ்ரீ சங்கரஜயந்தி தேவக்கோட்டை.

இவ்வூர் வெள்ளயனூரணி அக்ராஹாரத்தில் செ. நாகசாமி அய்யர் அவர்கள் கிரஹத்தில் வழக்கம்போல் சித்திரைமீ 10உ வியாழக்கிழமை அன்று ஸ்ரீமதாசாரிய ஜயந்தி மஹோத்ஸவம் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. இத்துடன் முதல்நாள் ஷை நாகசாமி அய்யரும் 2-வதுநாள்ரு.ம. நாகசாமி அய்யரும் 3-வது நாள் ஷை யூர் சு ப. ரும. நடேசய்யர் அவர்களும் 4-வது நாள் வைதிகப்ராம்மணர்களும் 5-வதுநாள்ஷை செ.நாகசாமி அய்யர் அவர்கள்பந்துக்களுடனும்(3 வேதபாராயணங்களைப்ரஸ்தான த்ரய பாஷ்யங்களுடனும்) செய்தார்கள் மத்தியில் கருங்குளம் நா. கிருஷ்ணசாஸ்திரிகள் அவர்கள் ஆசார்யபரம்பரை என்னும் விஷயத்தை பக்தர்களுக்கனுகுணமாய் நன்ருக உபன்யசித்தார். இவ்விதமாக அவரவர்களும் ஒழுங்காக கவனித்து மண்டகப்படிகளை நடத்திவைத்தார்கள். 4-வது நாள்இரவு அறியக்குடி ராமானுஜய்யங்கார் அவர்கள்பாட்டுக் கச்சேரியும் மிக ஆனந்தமாக நடைபெற்றது. இவ்விதமாக 14உ திங்கட்கிழமை இரவு புஷ்பப் பல்லக்கில் ஊர்வலமும் சம்பாவனைகளுடனும் உத்ஸவம் இனிது முடிந்தது.

ஸ்ரீ சத்குருசரணாரவிந்தாப்யாம் நம:

எஸ். என். சிவராமகிருஷ்ணதீக்ஷிதர்.

ஸ்ரீ சங்கரஜயந்தி தினக்கொண்டாட்டம்.

நிகழும் பிரஜாபதிநாம ஸம்வத்ஸரம் சித்திரைமீ 9உ புதவாரத்தன்று கோவல்விரட்டானம் ஆரியதர்மாபிவர்த்தினி பிராமண மகாஜனங்களின் ஆதரவில் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகளின் திருவுரு பிம்பத்திற்கு ஷோடசோபசார பூஜைகள் நடத்தி அதன் பிறகு ஸ்ரீ சங்கரசரித சருக்கம் படிக்க நீர்மோர் பானகம் சுண்டல் முதலியவைகள் விநியோகிக்கப்பட்டு சந்தன தாம்பூலங்கள் வேதகோஷத்துடன் வழங்கப்பட்டும் வந்திருந்த மகாஜனங்கள் ஸ்ரீ பகவத்பாதாளுடைய பாதகமலங்களில் மிக்க பக்தி புரஸ்ஸரமாய் நமஸ்கரித்து ஸ்ரீ பகவத்பாதாளுடைய பிரஸாதத்திற்கு பாத்திரர்களானுர்கள்:

எஸ் ஸ்ரீநிவாச சாஸ்திரி.

ஸ்ரீ சங்கரஜயந்தி உத்ஸவம்.

நிகழும் பிரஜாபதி நாம ஸம்வத்ஸரம் சித்திரை மீ 5உ ஸ்திரவாரம் பனையப்பட்டி ஸ்ரீ மீனாக்ஷிபுரம் அக்ராஹாரத்தில் ஸ்ரீ ஸனாதன தர்ம ஸம்வர்த்தினீ சபையாரால் ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்யாள் ஜயந்தி உத்ஸவம் ஸ்ரீமத் ஆதிசங்கராசாரியாள் ஸ்ரீ சாரதாம்பாள்படம் வைத்து ஆவாஹனம்செய்து ஆரம்பமாகி 5-நாள் வரை விமரிசையாய் நடந்தது. ஷை மீ 9உ புதன்கிழமை இனிது பூர்த்தியுற்றது.

ஒவ்வொரு தினமும் காலையில்4 கனபாடிகளை வைத்துஉபனிஷத் பாராயணம் பூர்ணமாய் நடந்தது.

ஸ்ரீ சங்கராசாரிய அஷ்டோத்ரம், லலிதை சிவ விஷ்ணுஸஹஸ்ரநாமார்ச்சனைகள் தினமும் ஒவ்வொருவர் உபயமாய் நிவேதன வினியோகங்களுடன் நடந்தன.

ராத்திரியில் ஹரிஹர பஜனோத்ஸவ பத்ததிப்ரகாரம் ஒரு நாள் சைவோத்ஸவமாயும் ஒரு நாள் வைஷ்ணவோத்ஸவமாயும் திவ்ய நாம ஸங்கீர்த்தனத்துடன் வேணுகான பண்டிதர் பிரம்மஸ்ரீ பாகவதர் சுந்தரமய்யரவர்கள் நடத்திவைத்தார்கள். ஐந்து நாளும் தேவார பாராயண கானமும் இனிது நடையுற்றது.

பிரசிடெண்டு பிரம்மஸ்ரீ ராமஸ்வாமிஅய்யர் அவர்களின் அக்ராஸனத்தில் பிரம்மஸ்ரீ வெங்கடேசய்யர் ஸனாதனதர்மமே அனுஷ்டிக்கத் தக்கதென்றும் பிரும்மஸ்ரீ நாராயணஸாமி அய்யர் அத்வைதம் பரமார்த்தமானதென்றும், உபன்யாஸங்கள் நடத்தினார்கள்.

பரமக்குடி பிரம்மஸ்ரீ ஹரிஹரகவி அவர்கள் ஸ்ரீ ஆசார்ய அவதார விஷேசத்தை தமிழில் 33-கவிகளால் செய்து ஸன்னிதானத்தில் ஸமர்ப்பித்தார்கள்.

ஐந்தாம்நாள் பிராமணசந்தர்ப்பணையும் நடந்தது. 250-ஜனங்களுக்கு மேல் வந்திருந்தார்கள். இராத்திரி ஸ்ரீ ஆசாரியாள்படமும் ஸ்ரீசாரதாம்பாள்படமும் இரண்டையும் அலங்கரித்து ஸ்வஸ்திவாசனம் பஜனை மேளவாத்தியத்துடன் பக்தகோஷ்டிகள் ஊர்வலம்வந்து வித்வத்ஸம்பாவனை செய்யப்பெற்று மந்திராக்ஷதை பிரஸாதம் வழங்கி மங்களமாய் உத்ஸவம் பூர்த்திபெற்றது.

பனையப்பட்டி,
3—5—31.

வெங்கடேசய்யர்,
காரியதரிசி.

ஸ்ரீசங்கரஜயந்தி வைபவம்.

ஆசார்யமஹிமை.

ஸ்ரீ சங்கர ஜயந்தி என்பது நமது பரமாசார்யர்களான ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய பகவத்பாதாள் இவ்வுலகில் அவதரித்த புண்யதினமாகும். இது நமக்கு ஜயத்தையும் புண்யத்தையும் விருத்திசெய்வதால் ஜயந்தியென கூறப்படுகின்றது. இன்றைய தினம் நாம் நமது பரமாசார்யர்களின் திருவடிகளில் பக்தியுடன் பணிந்து அவர்களது திவ்ய சரித்திரங்களை ச்ரவணம் செய்து அவர்களுக்கு வந்தனம் வழிபாடுகள்செய்து அதனால் மிகவும் கிருதார்த்தர்களாய் ஆகவேண்டியது நமது மேலான கடமையாகும். ஏனெனில் ஆதிகாலத்தில் நமது தேசத்தில் தர்மம் குறைந்து அதர்மம்மேலிட்டு அதனால் துர்மதங்கள் மேலோங்கி ஸன்மதங்கள் க்ஷீணதிசையை அடைந்திருந்த ஸமயத்தில் கைலாஸ நாதனாகிய ஸ்ரீ பரமேச்வரன் கருணை கூர்ந்து ஸ்ரீ சங்கரபகவத்பாதராய் இங்கு அவதரித்து அந்த துர்மதங்களையெல்லாம் அடியோடு துலைத்துவிட்டு ஸன்மதங்களை நன்கு நிலைநாட்டி நம்மைக் காப்பாற்றி அனுக்ரஹித்தார்கள் என்பது அவர்கள் திவ்ய சரித்திர ஸாராம்சத்தை அனுஸந்தானம்செய்யும் ஒவ்வொருவருக்கும் நன்கு வெளியாகும். இவ்வித மகிமைவாய்ந்த குருநாதனை தினந்தோறும் ஆராதித்து அதனால் பாக்யசாலிகளாவது முடியாவிட்டாலும் வருஷத்திற்கு ஒருமுறையாவது அவர்களின் அவதாரதினமாகிய ஜயந்தி காலத்தில் அவர்களை நன்றாய் சாஸ்த்ரோக்தமாய் ஆராதித்து அதனால் நாம் புண்யவான்களாய் ஆகக்கூடாதா. ஆதலால் மித்ரமணிகளே! நாம் அனைவரும் இன்று முதல் ஸ்ரீ பகவத்பாதாளை நன்கு பக்திபாரத்தோடு ஆராதித்து அவர்களின் அபாரக்கருணைக்குப் பாத்திரர்களாவோமாக.

தவிர நமக்கு மேலான பாக்யமொன்று உண்டாயிருக்கின்றது. அதாவது ஸ்ரீ பகவத்பாதாளை ஸாக்ஷாத்தாய் தர்சனம் செய்ய நமக்கு அதிர்ஷ்டமில்லாவிட்டாலும் அவர்களுடைய அபராவதாரமாயும் கருணாமூர்த்தியாயும் உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்ய உத்தமகுணங்களோடு உதயமான உதாரமூர்த்தியாயும் நமது பாகதேயரூபமாயுமிருக்கிற ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதி

பதிகளான ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய குருவர்யர்களை ஸ்ரீ பகவத்பாதாளாகவும் ஸ்ரீ கருணாநிதிகளாகவும் ஸாக்ஷாத் பரமேச்வரனாகவும் பாவனைசெய்து அப்போதைக்கப்போது அவர்களுடைய சரணகமலங்களில் வந்தனைகளைச்செய்து அவர்களது திவ்யோபதேச அமிர்தத்தை நன்கு பானம்செய்து பரம ஆனந்தம் அடைந்து சுகித்திருப்பதேதான். இவ்வித பாக்யம் நமக்கு லகுவில் கிடைக்கக்கூடியதா. கிடைத்த இந்த நல்ல ஸமயத்தை நாம் வீணாக்காது மேற்கூறிய ஆசார்யவர்யாளை ஸதாகாலமும் த்யானம்செய்து அவர்களையே சரணமடைந்து அதனால் ஆத்மலாபத்தை அடைவதே நமது மேலான கடமையாகும். இந்த ஆசாரியாளின் ஆச்ருதரக்ஷணகிருபாளுத்வமும் இதரருக்கு ஒப்புயர்வுகிடையாத ஸௌஜன்யமும் விசேஷமான ஸௌசீல்யமும் இன்னுமுள்ள ஸத்குண ஜாதங்களும் நமது வாங்மனதிற்கு எட்டக்கூடியவையல்ல. இந்த ஸுந்தரமான மூர்த்தியை தர்சனம் செய்தபிறகு வேறொன்றும் மனதிற்குப்பிடிக்காமல் இந்த மூர்த்தியையே ஸதாகாலமும் தர்சனம்செய்துகொண்டு ஸமீபத்திலேயே நின்றுகொண்டிருந்து கிருதார்த்தர்கள் ஆகமாட்டோமாவென்று மனது சஞ்சலப்பட்டுக்கொண்டே ஆனந்தபரவசம் அடைந்துகொண்டே இருக்கின்றது. இந்த மூர்த்தியை மூன்று விடங்களில் தர்சித்து வந்தனம்செய்யும்படியான பாக்யம் எனக்கு ஏற்பட்டது. பிறகு இன்னும் கிடைக்கவில்லையே மறுபடி எப்போது இந்த பாக்யம் கிடைக்குமென்று ஸதாகாலம் மனதானது சிந்தித்துக்கொண்டே இருக்கின்றது. இவ்விதம் நம்மை தடுத்தாட்கொண்டு உஜ்ஜீவிக்கும்படிசெய்து கிருதார்த்தம் ஆக்குகின்ற ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஜகத்குரு கடாக்ஷத்தை நாமெல்லாம் ஸத்பக்தி விசேஷத்தாலும் ஜன்மாந்தரீய ஸுகிர்த விசேஷத்தாலும் பரிபூர்ணமாய் அடைந்து அதனால் ஸகலவிதமான நன்மைகளையும் அடைந்து கிருதார்த்தர்கள் ஆவோமாக.

சுபம். பலர்சூர், ராமநாதசாஸ்திரிகள்.

பண்ருட்டியில் சங்கரஜயந்தி உத்ஸவம்.

பற்பலர்கள் பொருள் உதவியின்பேரில் ப்ரம்மஸ்ரீ சாம்பமூர்த்தி கனபாடிகள் அவர்கள் மூலமாய் 23-4-31 ல் ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாசாரியாளுடைய அவதார தினம் குருவாரம் சுக்லபக்ஷம் பஞ்சமதிதி காலையில் பஜனைகோஷ்டிகளுடன் பஜனையும் பிறகு சாஸ்த்ரோக்தமான மகன்யாச ஜபம் மேள வாத்தியத்துடன் பூஜை முதலிய அபிஷேகமும் ஆராதனமும் பிராமணசந்தர்பணையும் எழைகளுக்கு கஞ்சியும் சாயங்காலம் பஜனைகோஷ்டி வேதபாராயணம் மேளவாத்யம் முதலிய பிருதுகளுடன் ஸ்ரீ ஆசாரியாளுடைய திருவுருவப்படம் ஊர்வலமும் அதன் பிறகு ஆசாரியாள் அவதாரத்தின்விமரிசையைப்பற்றிகாவேரிப்பட்டணம் ப்ரம்மஸ்ரீ சூரியநாராயணதீக்ஷிதர் அவர்களால் உபன்யசிக்கப்பட்டது. பானகபூஜையும் 24-4-31 ல் (உலகக்ஷேமார்த்தத்தின் பொருட்டு சுக்கிரவாரம் ஸ்ரீ அம்பாளுக்கு லலிதாசஹஸ்ரநாம அஷ்டோத்தர அர்ச்சனையும் ஷை தினம் முதல் 29-4-31 வரையில் ஸ்ரீ காசிவாசி உ. வே- யூ. பி. கிருஷ்ணமாசாரியாரவர்களால் பிராணாயாமம் ஆன்னிகம் தேவதாபூஜை காயத்திரீ முதலிய பிராமணகர்மாக்கள் விஷயமாய் ஆங்கிலத்திலும் தமிழிலும் சாங்கோபாங்கமாக உபந்யாசம் செய்யப்பட்டது. அது விஷயமாய் ஸநாதனதர்மசபையும் திறந்து வைத்திருப்பதால் ஆஸ்திகபக்தர்கள் மெம்பர்களாகச் சேர்ந்து ஷைசபாவை மேன்மேலும் விருத்தியடையும்படிசெய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது.

சாம்பமூர்த்திகனபாடிகள்,
ஸ்ரீமடம் முத்திராதிகாரி.

ஸ்ரீ சங்கரஜயந்திமகோத்ஸவம் நாகப்பட்டணம்.

நாகப்பட்டணம் ஆசார்யகைங்கர்யசபையின் ஆதரவில்சென்ற சித்திரைமீ 2உ (22-4-31) புதன்கிழமையன்று ஸ்ரீ சட்டணாத ஸ்வாமி கோவிலில் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவமானது வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்று ஸ்ரீ சட்டணாதஸ்வாமியின் பிரம்மோத்ஸவ த்வஜாரோகண தினமானதால் காலை த்ஜாரோக

ணமானவுடன் ஸ்வாமி அம்பாள் தக்ஷிணாமூர்த்தி ஸன்னிதானங்களில் மஹந்யாஸ புரஸ்ஸரமாக அபிஷேகங்கள் நடந்ததும் ஸ்ரீ குருமூர்த்தியின் உத்ஸவவிக்ரஹத்திற்கு அபிஷேகம் ஆனபிறகு அந்த குருமூர்த்திக்கும் ஸ்ரீ ஆதிசங்கரபகவத்பாதாளுடைய படத்திற்கும் விசேஷமாக ஆராதனங்களும்நடத்தப்பட்டு பிறகு த்யாக சமுத்ரம் பிரம்மஸ்ரீ விசுவனாதசாஸ்திரிகளவர்களால் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுடைய அவதாரத்தையும் அவர்களுடைய மஹிமையும் அவர்களால் அத்வைத சாஸ்திரத்திற்கு ஏற்பட்டிருக்கும் விசேஷ கௌரவத்தையும் அவர்களுடைய பாஷ்யங்களின் மாஹாத்ம்யத்தையும் குறித்து வெகு அருமையாக உபன்யாசம் செய்யப்பட்டது உத்ஸவத்தையும் ஸ்ரீஜயந்திமகோத்ஸவத்தையும் முன்னிட்டு பிராமணபோஜனம் நடத்தப்பட்டது. சாயந்தரம் விசேஷமான உபனிஷத்பாராயண கோஷ்டியுடன் ஸ்ரீ குருமூர்த்திக்கும் அபிமுகமாக ஸ்ரீபகவத்பாதாளுடைய படத்திற்கும் ஊர்வலம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டது, நமது பரமலக்ஷ்யத்திற்கு ஆசாரியபக்தியே முக்கியஸாதனமாக இருப்பதாலும் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவமே அதற்கு முக்கியமான அறிகுறியாக இருப்பதாலும் இது மேன்மேலும் அபிவிருத்தியடையும்படி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அனுக்ரஹிப்பாராக,

N, சாம்பசிவய்யர்.
காரியதரிசி.

சுருதிவிசாரம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்துக்கு அத்வைதம் அவைதிகம் என்று பிரசுரித்த உத்திராதிமடம் ஸ்ரீ மாத்துவமதாசாரியாள் விஜயம் செய்தார்கள் 28-4-31 29-4-31 இந்த இரண்டுதினங்களிலும் நேரில்போய் தரிசித்துப்பேசுங்கால்என்னை தர்க்கபண்டிதர்களான மாத்துவமதஸ்தர்களை அழைத்துவைத்துக்கொண்டு பலவிதமான அத்வைத விஷயமான ப்ரசனங்களை செய்ததற்கு உத்தரம் நன்றாய் சொன்னதின்பேரில் மறுநாளும் வரவேணுமென்று சொன்னதின்பேரில் போய்ப்பேசுங்கால் காலேஜ் உபாத்தியாயர்

களான எம்.ஏ. எல். டி ஸ்ரீமான் பஞ்சாபகேசய்யாவர்களும் ஸ்ரீமான் சிதம்பரமய்யர் அவர்களும் வந்தார்கள். அத்வைத விஷயமான பிரசங்கம் நடந்தது. ஷை உபாத்தியாயர்களும் பண்டிதர்கள் போலவே வியவஹரித்தார்கள். தத்வமஸி சுருதிவிசாரம் துடங்கி நடந்துவருகையில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளுடைய அனுக்ஹத்தால் அக்காலத்தில் நான் பாதார்தஸாமாநாதிகரண்யமான சோ: ஸ்தாணு: என்பதையும் லக்ஷணாவிருத்தியையும் அனேக உபப்ரமாணங்களுடன் நன்றாய் உபபாதித்தேன். அத்வைதத்துக்கு சுருதிகள் பூராவும் இடமென்றும் உபபாதித்தேன். பிறகு அத்வைதமென்பது எப்படி சித்தித்ததென்று கேட்டார்கள். உங்களுக்கு த்வைதமென்று எப்படி சித்தித்ததென்று பதில் நான் கேட்டதற்கு பிரத்யக்ஷத்தாலேயே பேதங்கள் தெரியவருகிறதென்றார்கள். அப்படியானால் अप्राप्तेहिशास्त्रमर्थवत् என்கிற மீமாம்ஸா சூத்திரப்படி உங்கள் மதமான த்வைத பாஷ்யமே உபதேசிக்க வேண்டாமென்று பதில் சொன்னேன். இத்துடன் சபை நின்றுவிட்டது. ஸந்திபாகாலமானதால் அனுஷ்டானத்துக்காகஎல்லோரும்புரப்பட்டுவிட்டோம். இதுநடந்ததின்சுருக்கம் இதனால் கண்டுபிடிக்கப்பட்டது எது என்பதை நன்கு உணரலாம்

புதுக்கோட்டை தாஸில்தார். காளி ரங்கசாரியார்.

ஓர் ப்ரத்யுத்தரம்.

'அத்வைதம் அவைதிகம்'' என்று சொல்லக்கிளம்பி கும்பகோணம் ஆரியதர்மம் முதலான பத்திரிகைகளில் பலவிதமான கலஹாஸ்பதமான எழுத்துக்களை படித்துப்பார்த்தும் சேழ்வைப்பட்டும் ஷை கலஹாஸ்பதமான சொற்களை வெளியிடாமல் மூன்று மதஸ்தர்களும் ஒன்றாகவே இருக்கவேண்டுமென்றெண்ணி 'ஜனமித்திரனிலும்' 'ஆரியதர்மத்திலும்' 2 வியாஸம்எழுதினதை நான் ஒப்புக்கொள்வதில் ஆக்ஷேபமில்லை. மேற்படி 2-வது வியாசத்தில் ஸ்ரீ மத்வாசாரியாளுடைய கிரந்தத்தில் சொல்லாததை எழுதியிருப்பதாயும் மேற்படி கிரந்தத்தை ஏளனமாக காண்பிவிப்பது போல் எழுதியிருப்பதாயும் அதற்கு மறுமொழி கொடுக்கவேண்

டுமென்றும் பின்னும் அது ஸம்பந்தமாக எழுதுகிறேன் என்றும் ஸ்ரீமான் சஞ்சீவராவ் அவர்கள் எழுதியிருப்பதைப் படித்துப் பார்த்தேன்.

ப்ரத்யுத்தரம்: —

நான் எழுதிய வியாசத்தில் பிறர் கேள்விக்கு இடமுள்ளதாயும் அதற்கு மறுமொழி கொடுக்க இடமுள்ளதாகவும் க்ரந்தங்களை ஏளனமாகவும் ஸ்ரீ மத்வாசாரியாளுடைய பாஷ்யத்தைப்படிக்கா மலும் எழுதினவனல்ல. அப்படிக்கு நான் எழுதினதில் தோஷம் தோன்றினால் ஒருஸபைகூட்டி மூன்று மதஸ்தர்கள் முன்பு நான் எழுதியதைப் படித்துக்காண்பிவித்து அதன் பொருளையும் விரிவாகச் சொன்னபிறகு கேள்விக்கு இடமிருந்து ஸபையார்கேட்டால் உடனே என்பேரில் தோஷ இல்லாமலே மறுமொழி சொல்லத் தயாராக இருக்கிறேன்.

மதக்ரந்தங்களிலும் 3-ஆசார்யர்களிடத்திலும் எனக்குபூர்ண மான பக்தி இருக்க என்னிடத்தில் பக்திக்குறைவுள்ளவன்போல் அபிப்பிராயப்பட்டு எழுதினதைப் பார்த்து என் மனது வருந்துகிறது. பதில் எழுத்து மூலமாய் இந்த யுகம் முழுமையும் எழுதினாலுங்கூட முடிவடையாது என்பதற்கு ஒவ்வொரு மதங்களிலும் கோடிக்கணக்கான க்ரந்தங்களிருப்பதும் எல்லாரும் அறிந்த விஷயமே.

ஸகலவித்தைகளுக்கும் ஸமுத்ரமாக விளங்கின பிரம்மஸ்ரீ அப்பய்யதீக்ஷிதாள் முதலான வித்வான்களுடைய க்ரந்தங்களில் இருப்பதில் கோடிபாகத்தில் ஒரு பாகத்தை எழுதிக் காண்பிவித்ததற்கு இவ்வளவு கோபமுண்டாகி பதில்கேட்டால் 'அத்வைதம் அவைதிகம்' என்று சொன்னதைக் கேட்ட இதரமதஸ்தர்களுக்கு எவ்வளவு கோபமுண்டாகுமென்பதை சற்று யோசிக்கவும்.

[நிற்க 'அத்வைதம் அவைதிகம்' என்று கிளப்பினவர்களால் இதுவரையில் அம்மாதிரி சொன்னதை ஸ்தாபிக்க முடிந்ததா.]

"பழையது கேள்க்கவில்லை" பழுதையும் அரிவாளும் பில்லறுக்க கேட்டேன்" என்ற பழமொழிபோல் 'அத்வைதம் அவைதிகம்' என்ற சப்தத்திற்கு வேறுவிதமாக ஸமாதானம் சொல்வது யுக்தமா என்றும் யோசிக்கவேண்டும்.

ஆகையால் ஏற்கனவே எழுதினபடி மதக்ரந்தங்களை முன்னிட்டு 3-மதஸ்தர்களும் அனுவசியமான சொற்களை ப்ரயோகித்து கலகத்தை உண்டாக்காமல் இருக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அந்தந்த மதஸ்தர்களுக்கு ஸ்வமதத்தில் அதிகமான அபிமானமிருக்கவேணுமென்பது சாஸ்திரம.

ஒரு மதத்திலும் பக்ஷபாதமில்லாதவனென்று சொல்லிக்கொண்டு இப்படிக்கு எழுதலாமாவென்றால "க்ருதேசபிரதிகர்த்தவ்ய'' மென்கிற பழமொழியை அனுசரித்து அத்வைதம் அவைதிகம்'' என்கிற சப்தத்தைக் கேட்டு வருத்தமடைகிறவர்களை திருப்தி பண்ணி வந்ததாக மதக்ரந்தங்களிலிருப்பதை எடுத்து உதாஹரித்ததாகக் கொள்ளவேணுமென்று முந்திய வியாசத்திலேயே எழுதியிருப்பதையும் உணரவேண்டும். காளி ரங்காசாரியார.

ஆசார்ய சரித்ரச் சுருக்கம்.

(357-வது பக்கத்தொடர்ச்சி)

इत्थं जित्वासमस्तान् जगति च सुदृढं स्थापयित्वासुधैर्यात्
अद्वैतं काञ्चिमाप्यस्वयमतुलधियारुह्यसर्वज्ञपीठम् ।
जित्वावाणीं च कांच्यमजनयदमलं कामकोट्याख्यपीठं
सोयं श्रीशङ्कराख्यो भुवनगुरुवरो भातुचित्तेसदानः ॥५॥

இவ்விதம் தான் ஒருவராகவே தைர்யத்துடன் உலகிலுள்ள ஸகல துர்மதஸ்தர்களையும் கண்டித்து அத்வைத மதத்தை அனைவரும் அங்கீகரிக்கும்படியாக நன்குஸ்தாபித்து ஸ்ரீகாஞ்சி என்கிற புண்யக்ஷேத்திரத்தை அடைந்து தம்முடைய சிறந்தஞானத்தால் அங்குள்ள ஸர்வக்ஞ பீடத்துக்கு அதிதேவதையாய் விளங்கும் ஸரஸ்வதி தேவியை ஜயித்து ஸர்வக்ஞபீடத்திலும் ஏறி பிறகு அந்நகரில் மிகவும் பரிசுத்தமான காமகோடி என்னும் பீடத்தையும் ஸ்தாபனம்செய்து அவ்விடத்திலேயே தமது ஸூக்ஷ்ம சரீரத்தால் எந்த பிரபுவானவர் இப்பவும் விளங்கிவருகிறரோ ஸ்ரீ சங்கராசார்யர் எனப் பிரசித்திபெற்ற லோககுருவான அந்தபரமேசுவரன் எப்பொழுதும் நமது சித்தத்தில் விளங்கிக்கொண்டிருக்கட்டும்

(5)

इत्थं गुरुवरकरुणामाप्तुं शङ्करजयन्त्यामिहयमहे ।
पञ्चापगेशरचितं पञ्चकमेतन्मुदेस्तुसर्वेषाम् ॥

ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவத்தில் இவ்விதம் ஸ்ரீ லோககுருபரமாசார்யாளுடைய கருணையை அடையவேண்டி பஞ்சாபகேசனால் எழுதப்பட்ட ஆசார்யசரித்திர சுருக்கமாயுள்ள இந்த ஐந்து சுலோகங்களும் ஸகலஜனங்களுக்கும் ஸந்தோஷத்தின் பொருட்டு ஆகட்டும். சுபம்.

வே, ராதாகிருஷ்ணன்.

ஸனாதன தர்மஸம்ரக்ஷண ஸபை.

இப்பெயர்கொண்ட ஸபை தஞ்சையில் 9-5-31ட 10-5-31 சனி ஞாயர் இரண்டு தினங்களிலும் நடந்தது. இச்சபை தஞ்சைஜில்லா ஸபையென்று வழங்கிவருவதென்பது ஆஸ்திகர்களது ஞாபகத்திலிருக்கும். இச்சமயம் நம் ஸனாதன தர்ம விஷயமாய் சீர்திருத்தக்காரர்களாலும் ஆர்ய ஸமாஜக்காரர்களாலும் மதம் இன்னதென்றறியாது மேற்றிசைப் படிப்பின் உயர்வாலும் உத்யோகம் செல்வாக்கு ஜனமதிப்பு முதலிய கௌரவத்தைப் பாராட்டிக்கொண்டு நம்மவர்களென்று பெயர்சொல்லிக்கொண்டு ராஜாங்கத்தில் மதவிஷயத்திலும் சட்டமூலமாய் நம்மையும் நம் ஸனாதன தர்மத்தையும் கவிழ்க்க முயற்சிப்பவர்களாலும் செய்யப்படும் உபத்திரவங்களை விலக்கி மதவிஷயத்தில் நாங்களும் எங்கள்கவர்மெண்டும் தலையிடமாட்டாதென்று அபயப்ரதானம் செய்து வாக்களித்த நம் விக்டோரியா மகாராணியின் வாக்கியத்தையே முதற்பிரமாணமாய் வைத்துக்கொண்டு செங்கோல்பிடித்துச் சிங்காஸனம் ஏறிய நம் காருண்யமுள்ள சக்கிரவர்த்தியையும் அவரது கவர்மெண்டையும் வேண்டி நம் மதவிஷயத்தில் தலையிடாமலிருக்கும்படி செய்துகொள்ளவும் இனியும் நம் ஸந்ததிக்கு மதவிஷயமாய் நாம் செய்யவேண்டிய கடமையாதென்று உணர்ந்து அதன்படி நாமும் நம் ஸந்ததியும் தூக்கத்தைவிட்டெழுந்து கூடியமட்டிலும் அனுஷ்டானம்செய்து நம்மைத் திருத்திக்கொண்டு நம் இந்தியாவில் மனுஷ்யர்கள் எல்லோரும் உண்

மையான சகோதரத்தன்மையோடு வளர்ந்து மேன்மேலும் சுகமடைந்து இகபரசுகமடைவதற்கும் யோசனை செய்யவே ஓர் பெருங்கூட்டம் கூடியது. இக்கூட்டம் எவ்விதம் நடபெறுமோவென்று தயங்கிய இச்சபை அபிமானிகளின் கவலையை எதிர்பாராதபடி இச்சமயம்கூடிய ஏராளமான ஆஸ்திகலௌகிகர்களினுடையவும் பண்டிதர்களினுடையவும் கூட்டம் நீக்கியதுடன் இனி நமக்கு சுபமே கிடைக்குமென்றும் ஸந்தோஷத்தையும் விசேஷமாய்க் கொடுத்தது.

இச்சபைக்கு அக்கிராஸனம் வகிக்குமாறு புரொபசர் K சுந்தரராமய்யாவர்கள் தன் தள்ளாமை வயதையும் கவனிக்காமல் சபா அபிமானிகளால்வேண்டியபடி மறுத்தளிக்காமல் ஏற்றிருந்தும் தற்சமயம் எதிர்பாராதபடி ஏற்பட்ட தேகத்தின் அசௌகர்யத்தால் வரமுடியாமலேற்பட்டதை மிகநொந்தமனதுடன்தெரிவித்ததால் ; இனி ஆஸ்திகசிகாமணிவேண்டுமேயென்று தயங்கிய இவர்களுக்கு காசுக்கு ஆசைப்பட்டவனுக்குரத்தினம்கிடைத்தது போல் ஓர் உத்தம ரத்தினமே கிடைத்ததென்றால் இவர்களது சந்தோஷத்தை முன் உபமானமே தெரிவிக்கும். அந்த ரத்தினத்தை மானிடப்பெயரால் பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளென்று அழைப்பார்கள். இவர்கள் நம் இந்தியாவுக்கே தீபமாய் விளங்கியவர்களும் அதிலும் ஸ்ரீ சபா நடினரால் கடாக்ஷிக்கப்பெற்ற தென் தேசத்திற்கு மகிமையைக் கொடுத்தவர்களும் மாக்ஷிமை தங்கிய நம் மகாராணியாரின் ஆக்ஷி ஆரம்பகாலத்தில் இந்தியாவிலுள்ள உத்தம பண்டித ரத்தினங்களென்று யாவராலும் ஒருமனதாய் புகழ்ப்பெற்றவர்களுக்கு ராஜகீய பிருதைக் கொடுப்பதற்குத் தேடிப் பொருக்கியகாலத்திற்கிடைத்த நான்கே ரத்தினங்களுள் நம்சென்னை ராஜதானியில் ஒப்பற்றதாய்க்கிடைத்தவர்களும் மகாமகோபாத்தியாய பிருதைப்பெற்றவர்களுமான மகான் தியாகராஜாத்வரீந்திராள் என்ற ராஜூ சாஸ்திரிகளவர்களின் பௌத்திரர்களும் அவ்விதமகிமையையே பெற்றவர்களென்று கொண்டாடப் பெற்றவர்கள்.

(இன்னும்வரும்)

M. N. சுப்ரமண்யசாஸ்திரிகள்.

1

வார விருத்தாந்தம்.

ஸமபந்தி போஜனம்:—2உ வங்காள ஸ்திரீஸபை பெண் சுதந்திரம், ஜாதியையகற்றல், முதலிய தீர்மானங்களைச்செய்து ஸமபந்தி போஜனமும் வேண்டுமென வற்புறுத்துகிறது. வேற்றுமையை அகற்றி ஒற்றுமையை ஊட்டுமிது என நினைக்கின்றனர். இது எவ்வளவு அறியாமை என அனுபவிகள் அறியக்கூடும். ஆஹாரம் சுத்தமாய் கண்டவர் கண்ணில் படாம லிருந்தால் மனம் சுத்தமாகும். பிறகு க்ஞானோதயம், மோக்ஷம் எனப் படிப்படியாக ஸாதனமாயுள்ள இதை அழித்து இவர் கோரும் மோக்ஷம் எத்தகையதோ அறியோம். நம் பெண்மக்களை இவ்வலையில் சிக்காது காக்கவேண்டும்.

வாஸனை ஏறவில்லை:—வங்காள ஸ்திரீகள் செய்த தீர்மானத்தின் விவாஹரத்துசெய்ய உரிமை வேண்டுமென்ற பாகத்தை அதிக ஸ்திரீகள் சேர்ந்து எதிர்த்து அடித்துத்தள்ளிவிட்டனர். ஏன் கவலை? அவர்களுக்கு நாகரீகவாஸனை பூர்ணமாக ஏறவில்லை அடுத்தடுத்து ஸபைக்கு வந்தால் அவர்களே ஷை தீர்மானத்தைக் கொண்டுவருவர். நல்ல வாஸனை ஏறுவதுதான் கஷ்டம்.

சௌர்யத்தைக் காட்டுங்கள்! 4உ பாம்பேயில் ராமராவ்காமத் என்பார் எவ்வழியிலும் தனக்கு ஜீவனத்திற்கு வழியில்லை என துக்கித்து இரண்டு பெண்களைக் கொன்று தானும் தற்கொலை புரிந்தார். சட்டசபையில் வீற்று தேசோத்தாரணம் செய்வதாகக்கூறி மதத்தை அழிக்கும் மஹா புருஷர்கள் இப்படி படித்துப் பிழைப்பில்லாமல் சாவோரைக் காக்க பெரும் சம்பளத்தைக் குறைத்து எல்லோரும் அரைவயிறு உண்டு வாழும்படி தங்கள் சௌர்யத்தைக் காட்டுகிறதுதானே?

இப்போதாவது நம்புங்கள்:—தாயும் தாய்நாடும் ஸ்வர்க்கத்தைவிடமேல் இதை மறந்து ஜாண்வயிற்றிற்காக சாஸ்திர விரோதமாக கடல்கடந்து அன்யநாடு செல்வது அநுசிதமன்றோ? பர்மியர் விழித்து இந்தியரை விரட்டுகின்றனர். கண்டவிடத்தில் கொல்லுகின்றனர். உயிருக்கஞ்சி மாதா. கோவிலோ சேரியோ பதுங்கி ஆணும் பெண்ணும் சிசுவும் கிழ

வரும் தினமும் க்ஷணமும் கப்பல் விடக்கூடாதா என்றலருகின்றனர். ஏனிந்த கஷ்டம்? சாஸ்திரத்தைவிடத் தனம் பெரிதென்போர் கதி இதுதான்.

ஸமரஸ புத்திவேண்டும்:- காந்தியைப்போற்றுவோர் ஸ்வாமி ரதத்தில் அவர் படத்தை வைத்தால்தான் கௌரவம் என்றெண்ணுவது தப்பு. கோவிலதிகாரிகளும் ரதமென்பது ஓர் உலகத்தின் அல்லது சரீரத்தின் பாவனை அதனுள்ளே இருதயத்தில் ஆத்மா வீற்றிருப்பதுபோல் ஓரிடத்தே பகவானிருந்தாலும் அவனில்லாத இடமில்லை. அன்றியும் ரதத்திலும் சரீரத்திலும் மேத்யமல்லாத பல இடங்களும் வஸ்துக்களும் காணப்படவில்லையா? அதேபோல் இதுவும் ஓர் மூலையில் கிடக்கட்டுமென அவர்களுக்கு அதிக இடங்கொடாமல் ஸமரஸப்படுத்தலாம். 3௨-விசாகப்பட்டிணத்தில் ஷை விஷயமாகசண்டை நடந்து 3 பேருக்குக் காயமாம்?

உண்மைதான்:—4௨-லண்டன் பார்லிமெண்ட் அங்கத்தினரான வில்லியம்ஸின் என்பவர் ஓர் உபந்யாஸம் செய்யும்போது இந்தியாவில் பல பாஷாஜாதிபேதமிருந்தும் ஒற்றுமையிருக்கிறது. அன்ய நாகரீகத்தை எதிர்த்து இந்திய தேசியத்தை விரும்புவதால் தான் காந்திக்கு செல்வாக்கென கூறினர். இது இரண்டும் முற்றிலும் உண்மையே. ஆனால் நமதாசாரத்தில் சிலதை காந்தியும், பலதை அவர் சிஷ்யரும் எதிர்க்கின்றனர். மேனாட்டவர் உபதேசத்தாலாவது நல்வழிவருவாரா?

நல்லுபதேசம் செய்யவேண்டும்:—ஸமீபத்தில் இந்தியாவெங்கும் இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு முயற்சி நடந்துவருகிறது கான்பூரில் நடந்த கலஹத்தில் பலாத்காரமாக 49 இந்துக்கள் மொட்டையடிக்கப்பட்டு கொன்றுவிடுவதாக பயமுறுத்தி துலக்கர் செய்த அன்னத்தை சாப்பிடும்படி செய்தனராம். மதமாறுதல் பலாத்காரம் ஹிம்ஸை முதலியன பாபகாமானதென அவர் மதகுருமூலம் உபதேசித்தால் அதிகஹிம்ஸையிராது. நம்மவரும் பழிவாங்கவேண்டுமென எண்ணம் கொள்ளலாகாது.

புரோஹிதர் புலியா? பாரதநாட்டிற்கு ஸ்வாராஜ்யமளித்தால் தங்கள் பிழைப்பு போய்விடுமென இங்கிலாந்தில் பயப்படும்

கோஷ்டி ஒன்றுண்டு. அதன் தந்தை சர்ச்சில் ஸ்ப்க்டேட்டர் என்ற பத்திரிகை இவர்களதுபேரி. அது லக்ஷக்கணக்கான தீண்டாதாரை தாக்ஷிண்யமற்ற பிராமண புரோகிதரிடம் காட்டிக் கொடுக்கவா ஸ்வராஜ்யம்? சென்ற ஸர்வகக்ஷி ஸபையில் பாதிரிக்கு மேல் பிராமணர் இருந்தனரே? என ஓலமிடுகிறது. எதற்காக இவர்கள் இப்படிக்கருணை காட்டுகின்றனரென்பதை சொல்லவும் வேண்டுமா? ஆயினும் நம் தேசிய தலைவர் உண்மையாகவே சண்டாளர்களை வதைப்பதாகக் கூறுகின்றனர். ராஜீய தந்திரம் நன்கு தெரிந்த திலகர்போன்றோரில்லாத குறைதானிதற்குக் காரணம்.

வரவேற்கிறோம்:—கும்பகோணத்தில் சித்திரை ௴ 16,17௳ வேத லக்ஷணமறிந்தோர் ஸபை கூடிற்று. இதுபோன்றவை தான் ஸபை என்றசொல்லுக்குப்பொருளாகும். வைசாகோத்ஸவத்தில் காஞ்சியிலும் கூடுமாம். ஏதோ இரண்டு புஸ்தகங்களை விமர்சநம்செய்து நிராகரித்ததோடில்லாமல் இக்கலை அழியாதபடி தேசோபகாரமாய் ஸபைகூடி உழைக்கவேண்டுமென வாழ்த்தல் வேண்டும்.

நம்மாட்டையே சிறந்தது 9௳ அமரிக்கப்பாதிரிடக்கர் என்பவர் காந்தி சீடனானதற்குக் காரணம் சொல்லும்போது பல்லாயிரம் ஆண்டுகளாக அனுபவித்துப் பார்த்து இந்தியாசீதோஷ்ண ஸ்திதிக்கேற்றதென தீர்மானித்து அனுஷ்டித்து வருகின்றனர். நானும் அதையே அனுஷடிக்கிறேன். பல கஷ்டங்களிருந்து கூட பொய்யான ஓர் கௌரவத்திற்காக சீமை உடுப்பை உடுத்தி பலர் கஷ்டப்படுகின்றனர் என்றார். நம்மவர்களோ தீராது. உத்யோக காலத்தில் அவசியமானல் அணியப்பட்டும் ஸபைகளுக்கு விவாஹாதிகளுக்குச் செல்லும்போது கூட துரை போல் உடை உடுத்தி கீழே உட்காரமுடியாமல் அவஸ்தைப்படுகின்றனர்,

இதுபோன்றதேதேவை 1௳ பெங்களூரில் துலுக்கர் ஸபைக்கு தலைமை வஹித்து நவாப் குலாம் அஹமத்கலாம் என்பவர் உன் மதத்தை உபன்யசி அன்னியரை நிந்திக்காதே உம்மதத்திலிழுக்காதே உண்மை மதத்தை மறந்து வெறிபிடித்து பலர் மார்க்கத்தைவிட்டு இதற்கே அவமானத்தைத் தேடுகின்றனர். சாந்தம் பிறருக்கு எவ்வகையிலும் துன்பமில்லாமை போன்றதைக்

கைகொள்ளவேண்டுமென கருத்துப்பட அழகாக உபன்யசித்தார். இதுபோன்ற உபன்யாஸமே தற்காலத்திற்குவேண்டியது

உபமானம் சரியல்ல:- அவர் பிச்சை எடுத்தாவது பிராமணர் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுகின்றனர், அதை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்றார். இவர்கள் ஆங்கிலக்கல்விக்கல்லவோ அப்பாடு படுகின்றனர். அதன்மூலம் ஸ்வமதக்கல்வி ஆசாரங்களனைத்தை யும் விடுகின்றனர்' இது இவருக்கிஷ்டமா ? ஆனால் உவமை கல்வியில் ஊக்கம் என ஏகதேசத்திற்காயின் ஒப்பலாம். மதக் கல்விக்கு அப்பாடுபடுவதாக நினைக்கிறாரோ தன்னைப்போல் பிற ரை நினைப்பது ஸஹஜனந்தானே. உண்மைநமக்கல்லவோதெரியும்

ஒன்றுமில்லாததைவிட இதுவும்மேல்:- மதவிஷயமான ஊக் கம் மஹாஜனங்கள் மனதில் எளிதில் உண்டாவதில்லை. இச்சம யத்தில் தர்மானுஷ்டானத்தையோ அதற்குரிய பிரசாரத்தையோ கைங்கர்யத்தையோ எப்படி எதிர்பார்ப்பது? ஆண்டுக்கோர்முறை ஜில்லா பிராமணசபை மாகாணசபை கூடிக்கலைவது பயனற்றதோ என பலர் ஸம்சயிக்கின்றனர். ஒன்றுமே இல்லாததைவிட இது எவ்வளவோ மேலெனத் தகும். சென்றவாரம் தஞ்சையில் ஷடி ஜில்லாசபை பிரம்மஸ்ரீ யக்ஞசுவாமி சாஸ்திரிகளவர்கள் தலைமை யில்க்கூடி கலைந்தது.

காரணமறியோம்:- ஸ்ரீ சிருங்கேரி சாரதாபீடம் ஸ்ரீ சங்கரா சாரியஸ்வாமிகளவர்கள் தனது பீடாதிபத்யத்தை சிஷ்யனிடம் ஸமர்ப்பிக்கிறதாக அறிகிறோம். இது ஓர் அபூர்வமான ஸம்பவ மென பலர் கருதுகின்றனர். பூர்ணயோக்யதையும் உத்தமகுண மும் வைராக்ய ஸம்பத்துமுள்ள இதுபோன்ற பெரியார்கள்பதவி வஹிப்பது லோகானுக்ரஹத்திற்காகவேயாம். ஏற்கனவே ஸம் ஸாரத்தை துறந்த பெரியார் இப்பட்டத்தைத் துறந்ததில் ஆச் சர்யமில்லை. ஆயினும் இப்பட்டத்திற்காகவே ஸன்யாஸம் செய்து கொண்டஇவாள் இதைஸன்யசிக்கயாதாமோர் தக்ககாரணமிருத் தல்வேண்டும். அது எப்படியாயினும் மான்யர்கள் எக்காலத்தும் பூஜிக்கத் தக்கவர்களே. தக்கோரை பூஜியாவிடில் தனது நன்மை கெடுமென கவிசக்ரவர்த்தியின் ஸூக்தி நினைவுக்கு வருகிறது.

ஸ்ரீவத்ஸ வே. சோமவதேசர்மா.